# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,VIRUDHUNAGAR DISTRICT AT SRIVILLIPUTTUR.

Calendar ) CC.No.574/2022
Preliminary Register)
Sessions)

Deposition of witness for ( Prosecution P.W. 1
( Defence
( Court

| | | | |
|---|---|---|---|
| Name | Chitra | Caste | |
| Father's Name | C.Alagumalai | Calling | Deputy Director |
| Village | Kovilpatti | Religion | Hindu |
| Taluk | Kovilpatti | Age | 39 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 04th day of October 2023

Accused present

**முதல் விசாரணை**

நான் தற்பொழுது கோவில்பட்டி தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார துணை இயக்குநராக பணிபுரிந்து வருகிறேன். நான் இதற்கு முன்னர் விருதுநகர் தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார துணை இயக்குநர்-I ஆக பணிபுரிந்தேன். விருதுநகர் மாவட்டம், மற்றும் விருதுநகர் வட்டம் மதுரை ரோடு, சின்னமூப்பன்பட்டி சர்வே எண்.6/377, அமைந்துள்ள தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், (மதுரை) லிட்., என்ற தொழிற்சாலையானது தொழிற்சாலையின் கீழ் பதிவு பெற்ற தொழிற்சாலையாகும். இதன் பதிவு எண்.VNR01045. திரு.நாகராஜ், வயது 45, த/பெ. சுப்பாராஜ், என்பவர் மேற்படி தொழிற்சாலையின் மேலாளர் ஆவார். அதற்கான படிவம் எண்.2, அ.சா.ஆ.1 ஆகும். இத்தொழிற்சாலையின் பணியாளர் மற்றும் அரசு போக்குவரத்து தொழிலாளர் சங்கம், விருதுநகர் பொது செயலாளர் ஆன திரு.வெள்ளைதுரை, என்பவரிடமிருந்து 21.01.2021 அன்று புகார் மனு பெறப்பட்டது. அப்புகார் மனுவில் 08.01.2020 மற்றும் 26.11.2020 ஆகிய தினங்களில் அகில இந்திய வேலை நிறுத்த போராட்டத்தில் கலந்துகொண்ட பராமரிப்பு தொழிலாளர்களுக்கு அந்தந்த வாரத்தின் ஓய்வு தினத்தை ஈட்டிய விடுப்பு கணக்கில் மாற்றயமைக்கப்பட்டடதாக குறிப்பிடப்பட்டிருந்தது. புகார் மனுவின்

அடிப்படையில் 29.04.2021 அன்று பிற்பகல் 03.50 மணியளவில் மேற்படி தொழிற்சாலையினை நான் ஆய்வு செய்தேன். ஆய்வின்போது பின்வருமாறு முரண்பாடுகள் கண்டறியப்பட்டது. மேற்படி தொழிற்சாலையின் மேலாளரிடம் விடுப்பு கோரி தொழிலாளர்கள் விண்ணப்பம் எதுவும் சமர்ப்பிக்காத நிலையில் 08.01.2020 மற்றும் 26.11.2020 (காரணம் கோரும் அறிவிப்பிலும் குற்றம் முறையீட்டிலும் 26.12.2020 தட்டச்சு பிழை ஏற்பட்டுள்ளது) ஆகிய நாட்களில் பணிக்கு வராமல் வேலை நிறுத்த போராட்டத்தில் கலந்து கொண்ட காரணத்தினால் மேற்படி இரு நாட்களுக்கும் அனுமதியின்றி விடுப்பாக (Absent) கழித்த பின்பும் சட்டத்திற்கு முரணாக அந்த வாரங்களுக்கான தொழிலாளர்களின் வார விடுப்பினை ஊதியத்துடன் கூடிய வருடாந்திர விடுப்பாக கழித்திருப்பது ஆய்வின்போது கண்டறியப்பட்டது. இது தொழிற்சாலைகள் சட்டப் பிரிவு 79 (6) உடன்பிரிவு 92-ன்கீழ் முரணாகும். மேற்படி தொழிற்சாலையில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கான வருகைப் பதிவேடு படிவம் 25-ன்படி பராமரித்து வைத்திருக்கப்படவில்லை. படிவம் 25 ஆய்வின்போது கேட்டும் கிடைக்கும்படி செய்யப்படவில்லை. இது தொழிற்சாலைகள் சட்டப் பிரிவு 112 விதி 103 உடன்பிரிவு 92-ன்கீழ் முரணாகும். மேற்படி தொழிற்சாலையில் பணிபுரியும் தொழிலாளர்களின் ஊதியத்துடன் கூடிய வருடாந்திர விடுப்பு குறித்த படிவம் 15ன்படியான பதிவேடு தொழிற்சாலையில் பராமரித்து வைத்திருக்கப்படவில்லை. ஆய்வின்போது கேட்டும் கிடைக்கும்படி செய்யப்படவில்லை. இது தொழிற்சாலைகள் சட்டப்பிரிவு 83 உடன்பிரிவு 112 மற்றும் விதி 87 உடன்பிரிவு 92-ன்கீழ் முரணாகும். புகார் மனு அ.சா.ஆ.2 ஆகும். பூர்த்தி செய்யப்பட்ட ஆய்வறிக்கை அ.சா.ஆ.3. டிசம்பர் மற்றும் ஜனவரி மாத வருகைப் பதிவேட்டின் நகல் அ.சா.ஆ.4. மேற்படி எதிரி அரசு பணியாளர் என்பதால் அவர் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்படுவது தொடர்பாக பெறப்பட்ட அனுமதி கடிதம் அ.சா.ஆ.5. எதிரிக்கு அனுப்பப்பட்ட காரணம் கோரும் அறிக்கை அ.சா.ஆ.6. பதிவு அஞ்சல் ஒப்புதல் அட்டை அ.சா.ஆ.7. எதிரியிடமிருந்து பதில் பெறப்படாததால் அவர் மீது நடவடிக்கை மேற்கொள்வது தொடர்பாக தெரிவிக்கப்பட்ட கடிதம் அ.சா.ஆ.8. மேற்படி எதிரி மீது வழக்கு தொடர அனுமதி கோரி மதுரை தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார கூடுதல் இயக்குநருக்கு அனுப்பப்பட்ட வழக்கு முன்மொழிவு பிரேரணை அ.சா.ஆ.9. திருத்தச்சீட்டு அ.சா.ஆ.10. வழக்கு அனுமதி ஆணை அ.சா.ஆ. 11. எதிரி முரண்பாடுகளை சரிசெய்துள்ளதாக தெரிவித்து இயக்குநர் தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம், சென்னை அவர்களுக்கு சமர்ப்பித்த 01.03.2023

தேதியிட்ட கடிதம் அ.சா.ஆ.12. மேற்படி எதிரியின் மீதான குற்றச்சாட்டு Covid 19 வைரஸ் தொற்று பரவல் தொடர்பாக தமிழ்நாடு மாநில அரசால் பொதுமுடக்கம் அறிவிக்கப்பட்டதால் பொதுமுடக்க காலத்தில் பொது/சிறப்பு சட்டங்களில் வழக்கு தாக்கல் செய்ய நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவிற்கு உட்பட்டு உரிய காலத்திற்குள் மேலான நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் எதிரியை விசாரித்து நீதியை நிலைநாட்ட வேண்டுமாய் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**மறு விசாரணை இல்லை.**

**சாட்சியின்**

**கையொப்பம்**

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 04th day of October 2023

Taken down by me open court read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

**Chief Judicial Magistrate,**
**Virudhunagar District at**
**Srivilliputtur.**